**திரைப்படக் கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு 2018**

---

## 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

திரைப்படக் கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கண்காணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாரளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் உனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் 2018 திசெம்பர் 31 இல் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல்

மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

**கணக்காய்வு அவதானிப்புகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | 1986 இன் 03 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம். | | | |
| (i) | 3.1 ஆம் பிரிவு | நம்பிக்கைப்பொறுப்பின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்காக 2013 ஆம் ஆண்டு முதல் நம்பிக்கைப் பொறுப்பு சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கைப் பொறுப்பு சபையொன்று நியமித்தல் தொடர்பில் தொடர்ச்சியாக வரிசை அமைச்சுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நம்பிக்கைப்பொறுப்பின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்காக நம்பிக்கைப் பொறுப்பு சபையொன்று நியமிக்கப்பட வேண்டும். |
| (ii) | 11 ஆம் பிரிவு மற்றும் 3 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களுக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவொன்றினூடாக அதிகாரமளிக்கப்பட்ட சபையின் இரு அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு சமர்ப்பித்திருக்கவில்லை. | தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கூட்டுத்தானப நம்பிக்கைப் பொறுப்பினதும் தலைவர் ஆனமையால் கூட்டுத்தாபன பொது முகாமையாளர் நம்பிக்கைப் பொறுப்பின் குழு அங்கத்தவராகின்றமையால் அவர்களால் கையொப்பமிடப்பட்ட வருடாந்த கணக்கு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் நம்பிக்கைப் பொறுப்பு சபையின் இரு அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு சமர்ப்பிக்க வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

---

### 2.1 அதிகாரங்கள், பணிகள் மற்றும் பணிப்பொறுப்புகள் இணங்காமை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான பங்களிப்பு ஓய்வூதிய முறைமையை தயாரித்தல், சேமிப்பிற்கான அல்லது சிக்கன சங்கம் மற்றும் ஏனைய சமனான முன்மொழிவு திட்டங்களை தாபித்தல், வீடமைப்பு வசதிகள் அல்லது ஏனைய சமனான நலனொன்றை வழங்குதல் போன்ற கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் பிரதான நோக்கங்களுக்காக நிதியீட்டும் முறைகள் | நம்பிக்கைப் பொறுப்பினை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு இறுதியாக சமர்ப்பித்து 2018 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நம்பிக்கைப் பொறுப்பின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதி ஈட்டும் முறைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியமை. |
| (ஆ) திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான ஓய்வூதியமாக மீளாய்வாண்டின் போது ரூபா 5,643,000 கூட்டுத்தொகை கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நம்பிக்கைப் பொறுப்பின் பணிகளுக்காக நம்பிக்கைப் பொறுப்பு சபையொன்றினை நியமிக்காமையால் நலனாளிகளுக்காக சேமிப்பு நிதியமொன்றினை தாபித்தல், சிக்கன சங்கங்களை உருவாக்குதல், கடன் வழங்குதல், வீட்டு வசதிகளை வழங்குதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | போதியளவான நிதியினை பொது திறைசேரியிலிருந்து பெற்றுக்கொண்டமையின் பின்னர் காத்திருப்போர் பட்டியலில் பதிவுசெய்யப்பட்ட தகைமை பெற்ற திரைப்பட கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான புதிய ஓய்வூதிய கொடுப்பனவை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நலனாளிகளுக்காக சேமிப்பு நிதியத்தினை தாபிப்பதற்கு சிக்கன சங்கங்களை ஏற்படுத்தல், கடன் வழங்குதல், வீட்டு வசதிகளை வழங்குதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 2.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி உண்டியல்கள், திறைசேரி மீள் கொள்வனவு பட்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைமுறிகளில் 2018 ஆம் ஆண்டினுள் நம்பிக்கைப் பொறுப்பினால் ரூபா 12,488,687 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மிகவும் இலாபமுடைய வட்டி நலன்களை பெற்றுக்கொள்ளும் வகையில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கூடிய வட்டி வீத தகவல்களின் அடிப்படையிர் கூடியளவு வட்டியினை வழங்குவதற்கு இணங்கிய இலங்கை வங்கியின் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. | முதலீடு செய்யும் போது மிகவும் இலாபமுடைய வட்டி நலன்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நம்பிக்கைப் பொறுப்பின் விதிக் கோவை இலக்கம் 3.3.5 இன் பிரகாரம் மற்றுமொரு வகையில் ஓய்வூதிய நலனொற்றை, நலன்புரித் தொகையொன்றை அல்லது உதவு தொகையொன்று கிடைக்குமாயின் ஓய்வூதிய நலன்களை பெற்றுக்கொள்ள தகைமையற்ற போதிலும், நம்பிக்கைப் பொறுப்பினால் ஓய்வூதிய நலன்கள் செலுத்தப்படும் கலைஞர்கள் தொடர்பில் அந்த விதியின் பிரகாரம் விசாரணைக்கு உட்படுத்த அல்லது தகவல் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மரணமடைந்த ஓய்வூதிய நலாளிகள் தொடர்பான தகவல்கள் காணப்படுகின்றன. | நலன்களை பெற்றுக்கொள்ள தகைமையுடைய நலனாளிகள் இனங்காணப்பட வேண்டியமை. |
| (இ) | நம்பிக்கைப் பொறுப்பினால் வழங்கப்படும் நலன்கள் தொடர்பில் திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களையும் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் புதிய நலனாளிகளை நிதியத்திற்கு பங்குபெறச் செய்வதற்கு முடியாதிருந்தது. | தகைமைபெற்றோர் தொடர்பில் ஆவணப்படுத்தப்பட்ட தகவல்கள் போதுமானதாக இல்லாதிருந்தமை / மாற்றமடைந்தமையால் இது நிகழ்ந்துள்ளது. | மேலும் நலனாளிகளை நிதியத்திற்கு பங்குபற்ற வைப்பதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. |